மலர் 34, இதழ் 11
நவம்பர் 2021

பிலவ ஆண்டு
ஐப்பசி - கார்த்திகை
திருவள்ளுவர் ஆண்டு 2052

விலை ரூ. 20/-
ஆண்டுக் கட்டணம் ரூ. 240/-

# கவிதை உறவு

மனிதநேய இலக்கியத் திங்களிதழ்



மனத்தில் பதிந்தவர்கள்
தொடர்...

நூற்றாண்டு விழா காணும்
குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா
கட்டுரை உள்ளே...




# மனத்தில் பதிந்த
# குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

குழந்தைகளுக்கு நண்பர்களாக இருப்பவர்கள் கொடுத்து வைத்தவர்கள். இன்னும் அதிகமாக முன்னாள் குழந்தைகளின் நண்பர்களாக இருப்பது கூடுதல் கொடுப்பினை. அப்படித்தான் நான் பள்ளி மாணவனாக குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பாவின் பாடல்களுக்கும் பின்னாளில் வங்கி அதிகாரியாக வங்கியாளர் அழ. வள்ளியப்பா அவர்களுக்கும் அறிமுகமானவன். பள்ளி மாணவனாக இருந்தபோதே எனக்குப் பரிச்சையமான பாட்டு, அந்தப் பிரபலமான லட்டு பாட்டுதான்.

வட்டமான தட்டு
தட்டுநிறைய லட்டு
லட்டு மொத்தம் எட்டு
எட்டில் பாதிவிட்டு
எடுத்தான் கிட்டு

என்று வளரும் அந்தப் பாடலும்,

“மாம்பழமாம் மாம்பழம்
மல்கோவா மாம்பழம்
சேலத்து மாம்பழம்
தித்திக்கும் மாம்பழம்”

என்ற சுவையான பாடலும் அன்று தமிழ்க் குழந்தைகள் ஒவ்வொருவருக்குள்ளும் தமிழையும், கற்பனைத் திறனையும் புகுத்தியவை எனலாம். எனக்கும் அவ்வாறே. தமிழ்ப் பாடல்களை மனனம் செய்வதற்கு, அவற்றின் ஓசை நயமும், எதுகை மோனையுமே காரணங்கள். அவை கவிதையின் மீது நமக்கு ஈர்ப்பை ஏற்படுத்துவது மட்டுமின்றி இலகுவானதும் கூட; முயற்சிக்கலாம் என்று உற்சாகப்படுத்துவதும் எளியநடைப் பாடல்களே. ஆகவே, குழந்தைப் பாடல்கள், குழந்தைப் பாடல்கள் மட்டுமல்ல. பாடல்களைத் தந்த பெரு மக்களும் பால பருவத்திலிருந்தே நம் பிஞ்சு மனங்களில் பதிந்திருக்கிறார்கள்.

அவர்களுள் மூத்தவராக, முதன்மையானவராக, முழுமையானவராக திகழ்பவர் குழந்தைக் கவிஞர் அழ வள்ளியப்பா அவர்கள். குழந்தை இலக்கியத்திற்கென்று ஒரு வரலாறு இருக்கிறது. குழந்தைப் பாடல்கள் முதலில் வாய் வழியாகவே வந்திருக்கும், வளர்ந்திருக்கும். தாத்தா பாட்டிகள், தாய் தந்தையர் குழந்தைகளுக்குச் சொன்ன தேவதைக் கதைகள், மிருகங்கள் குறித்த தகவல்கள், தாலாட்டுப் பாடல்கள், விடுகதைகள், நாட்டுப்புறப் பாடல்கள் என்று குழந்தைப் பாடல்கள் பிறந்திருக்கும்.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் அவை எழுத்து வடிவம் பெறத்தொடங்கின. இருபதாம் நூற்றாண்டில் முழுமைபெற்றன எனலாம். இப்போது கூடுதலாக நவீன தொழில் நுட்பமும் அவற்றைத் தூக்கி நிறுத்தியுள்ளது. ஜோனதான் எழுதிய கல்லிவரின் கதைகள், மார்க்ட்வெயினின் ஹாக்கின் பெரிஃபிள் சாகசங்கள், ஈசாப் கதைகள், இந்தியாவின் ராஜா சிவ பிரசாத், ஈஸ்வர சந்திர வித்யாசாகர் போன்றோர்களுடன் ரவீந்திரநாத் தாகூரும் குழந்தைகளுக்காக சில இலக்கியப் படைப்புகளைத் தந்துள்ளார். மாக்கவி பாரதியும் குழந்தைகளுக்கு எழுதிக் குதூகலம் கண்டவர். குழந்தைகளுக்கான நூல்கள் போலவே, குழந்தைகளுக்கான இதழ்

களும் இன்றுவரை தமக்கான இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளன.

குழந்தை எழுத்தாளர்களுக்கான வரவேற்பும் அங்கீகாரமும்கூட மகிழத்தக்கது. அவர்களுக்கான பரிசுகளும், பாராட்டுகளும் குறிப்பிடத்தக்கவை. சாகித்ய அகடமியின் பால புரஸ்கார் விருதுகள் குழந்தை இலக்கிய மேம்பாட்டுக்குத் துணை நிற்கின்றன. அன்னாளில் ஏவிஎம். அறக்கட்டளை சிறந்த குழந்தை இலக்கியங்களுக்குப் பரிசுகள் வழங்கியுள்ளது. கவிதை உறவும் ஆண்டுதோறும் சிறந்த மூன்று குழந்தை இலக்கியங்களுக்குப் பரிசு வழங்கிப் பாராட்டுகிறது. இப்பரிசுகளின் ஆதரவாளராக கவிஞர் கார்முகிலோன் திகழ்கிறார். பல்வேறு குழந்தைகள் அமைப்புகளும் இயங்கிவருவது மகிழத்தக்கது. வானொலி, தொலைக்காட்சிகளிலும் நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. இந்தப் பின்னணியை அழ வள்ளியப்பா அவர்கள் குறித்த செய்திகளுக்கு முன்னம் சொல்வது அவரது சிறப்புக்குக் கட்டியம் கூறுவது போன்றது.

‘‘பாரதி பரம்பரை, பாரதிதாசன் பரம்பரை போல தமிழில் குழந்தைக் கவிஞர் பரம்பரை ஒன்றும் உருவாகி வருகிறது’’ என்பார் டாக்டர் பூவண்ணன் அவர்கள். அவரும் ஒரு குழந்தை எழுத்தாளர்தான். ‘‘குழந்தைக் கவிஞரெனத் தமிழ்த்தாய் குலவிடும் தவப்புதல்வர்’’ என்று நாமக்கல் கவிஞர் அவரைப் பாராட்டுகிறார். அவர்களோடு தேசிகவிநாயகம் பிள்ளை, மேலை நாட்டுத் தமிழறிஞர் கமில் சுவலபில் போன்றோரும் பாராட்டி மகிழும் அழ வள்ளியப்பா அவர்களுக்கு இது நூற்றாண்டு தொடக்கவிழா. குழந்தைகள் கொண்டாடும் பெரிய குழந்தை அவர். குழந்தைகள் நலனையே பெரிதும் விரும்பியதோடு அவர்களுக்கெனவே வாழ்ந்த அவரை எழுதுவதில் என் பேனா பெருமையுறுகிறது.

“ஏடுதூக்கி பள்ளியில் இன்றுபயிலும் சிறுவரே
நாடுகாக்கும் தலைவராய் நாளை விளங்கப் போகிறார்”

என்று அவர் பாடியது போலவே அவருடைய பாடல் கேட்டு வளர்ந்தோர் இங்கே கோடிக் கணக்கிலெனக் கொள்ளலாம். பண்டித ஜவகர் லால் நேரு பிறந்த நவம்பர் 14ஆம் நாள் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்பட்டாலும், நவம்பர் 7ஐ நாம் குழந்தைகள் இலக்கிய நாளாக அழ வள்ளியப்பா அவர்களின் பிறந்த நாளில் கொண்டாடுகிறோம். கொண்டாட வேண்டும்.

‘‘கவிஞராக இருப்பது அதைவிடக் குழந்தைக் கவிஞராக இருப்பது வரம். குழந்தைகள் உலகம்தான் அரிதாரம் பூசாத அன்பு நிறைந்த பூந்தோட்டம். அதில் வண்டாகச் சுற்றி வந்து தேன் கவிதைகளைக் குழந்தைகள் நெஞ்சில் தெளித்தவர் அழ. வள்ளியப்பா’’ என்று ஆனந்த விகடன் அவருக்கு மகுடம் சூட்டி மகிழ்ந்துள்ளது. எண்ணற்ற விருதுகள், பட்டங்கள் பெற்றிருப்பினும் அவர் குழந்தைக் கவிஞர் என்றேதாம் அழைக்கப்படுவதைப் பெரிதும் விரும்பினார்.

புதுக்கோட்டை மாவட்டம் இராயவரம்தான் இந்தத் தமிழ் மகனைத் தந்து பெருமை போர்த்திக்கொண்ட அழகிய சிற்றூர். 1922ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் நாள் அழ. வள்ளியப்பா பிறந்தார். வீட்டுக்கு அருகிலேயே இருந்த காந்தி பாடசாலையில் படித்ததால் காந்தியைப் போல எளிமையான வாழ்க்கையைப் பள்ளிப் பருவத்திலேயே தொடங்கிவிட்டார். அசைவம் சாப்பிடுவதை அறவே நிறுத்திக் கொண்ட அற வாழ்வு. புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை இளமை தொட்டே ஏற்றிருந்த அழ, வள்ளியப்பா, தந்தையார் பேருந்துச் செலவுக்குத் தரும் பணத்தில் நூல்கள் வாங்கிக் கொண்டு நடந்தே பள்ளிக்குப் போய் வந்திருக்கிறார். அதிகமாகப் படிக்கவோ, கல்லூரிக்குச் செல்லவோ வாய்ப்பில்லை என்றாலும் தந்தையோடு சேர்ந்து இராயவரம் மற்றும் சுற்றியுள்ள பகுதி மக்களுக்கு விலை குறைவாகப் பொருள்கள் கிடைக்க எளிய வணிகத்தில் ஈடுபட்டிருக்கிறார். விவேகானந்தா வாசக சாலையில்தான் பொழுதைக் கழிப்பார். படைக்கும் திறனுக்கு வாய்ப்பாக படித்த அறிவு மேம்பட்டது. வை.கோவிந்தன் நடத்திய சக்தி, மங்கை, அணில் (குழந்தைகள் இதழ்) அலு வலகத்தில் காசாளராகப் பணியமர்த்திக் கொண்டார். அங்குதான் ‘அழ. வள்ளியப்பா’ என்ற குழந்தைக் கவிஞர் உருவானார். எழுத்தை மட்டுமே நம்பி வாழ்ந்திட முடியாது என்ற நிலையில் வள்ளியப்பா அவர்களுக்கு இந்தியன் வங்கியில் எழுத்தர் பணி கிடைக்கிறது. உணவுக்கு வங்கிப்பணி, உணர்வுக்கு எழுத்துப்பணி யென இருபணிகளுக்குமான நேரத்தைப் பகிர்ந்து கொண்டு இருவேறு துறைகளிலும் சிறந்தோங்கத் தொடங்கினார்.

அழ. வள்ளியப்பா அவர்களுக்கு வள்ளியம்மை வாழ்க்கைத் துணையானார். அவரும் ராயவரத்துக்காரர்தான். மகிழ்ச்சியான அத்தம்பதியர் மழலைச் செல்வங்களாக அலமேலு, அழகப்பன், கஸ்தூரி, உமா, தேவி என்று ஐவரைப் அருளப் பெற்றனர். அவர்கள் அத்தனை பேரும் நலமாக, நன்றாக இருப்பதோடு தந்தையின் புகழேந்தும் தீபங்களாகத் துலங்குகின்றனர். அழ. வள்ளியப்பா அவர்களின் பள்ளித் தோழ

ரான திரு. பழனியப்பன் அவர்கள் புகழ்வாய்ந்த புகழ்வாய்ந்த ‘பழனியப்பா பிரதர்ஸ்’ நிறுவன அதிபர். அவருடைய ஆதரவில் தமிழறிஞர் கோனார் அவர்கள் ஒத்துழைப்பால், அழ. வள்ளியப்பா அவர்களின் ‘மலரும் உள்ளம்’ என்ற முதல் குழந்தை நூல் வெளியானது. பின்னாளில், அழ. வள்ளியப்பா அவர்கள் ‘குழந்தைப் புத்தக நிலையம்’ என்ற பதிப்பகத்தைத் தாமே தொடங்கி நூல்கள் வெளியிடலானார். தொடர்ந்து மலரும் பூக்கள் என்று நூற்று க்கும் மேற்பட்ட பாடல்கள், அழகிய படங்கள், வண்ண அட்டை என்று பிரமாதமாக வெளியானது. இந்நூல் பல பதிப்புகள் கண்டதோடு கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாராட்டினையும் பெற்றது. குழந்தைப் பாடல்கள் எழுதுவோருக்கு இந்நூல் ஒரு வழிகாட்டியாக அமைந்தது கூடுதல் சிறப்பு.

அழ. வள்ளியப்பா அவர்கள் குழந்தைகளுக்கான பாடல்களோடு, குழந்தைகளுக்காக சிறுகதைகள், நாவல்கள் எழுதுவதிலும் பெரிதும் ஈடுபட்டார். அழ. வள்ளியப்பா அவர்களும் கல்கண்டு ஆசிரியர் தமிழ்வாணன் அவர்களும் நெருங்கிய நண்பர்கள். குழந்தைக் கவிஞர் என்ற அடைமொழியோடு அவருடைய படைப்புகளைத் தம் இதழில் வெளியிட்டு வந்த போதும் இருவருக்கும் ஒரு கருத்து வேறுபாடு வந்தது. துப்பாக்கி ஏந்துவது போன்ற பாத்திரங்கள் கூடாதென்ற அழ. வள்ளியப்பா அவர்கள் பிஞ்சு மனங்களில் தீவிரவாதம் வளர்க்கக் கூடாது என்றும் கருத்துடையவர். கருத்து வேறுபாடு இருந்தாலும் நட்பில் அவர்கள் நிலைத்திருந்தது இருவரின் பண்பு நலனுக்குச் சான்று.

அழ. வள்ளியப்பா அவர்கள் இந்தியன் வங்கி வட்டார மேலாளராக காரைக்குடியில் பதவி ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பிறகு கல்கி நிறுவனத்தில் ‘கோகுலம்’ குழந்தை இதழின் ஆசிரியர் பொறு ப்பேற்றார். கோகுலம் சிறுவர் சங்கம் என்ற ஒரு அமைப்பும் தொடங்கப்பட்டது. 1950ல் தாம் தொடங்கிய குழந்தை எழுத்தாளர் சங்கச் செயற்பாடுகளிலும் தொடர்ந்து ஆர்வமும் ஆடு பாடும் காட்டி வந்தார். எட்டு மாநாடுகளைத் திறம்பட நடத்தியதோடு குழந்தைகள் நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், அறிவியல், வரலாறு என்று ஆறு பிரிவுகளில் (கையெழுத்துப் பிரதிகள்) பரிசளித்து பெருமைப்படுத்தி வந்தார்.

குழந்தை எழுத்தாளர்கள் சங்கத்தில் மட்டுமல்ல தமிழ் எழுத்தாளர் சங்கத்திலும் பெரிதும் ஈடுபாடு காட்டியவர் அழ. வள்ளியப்பா அவர்கள். 1956 ஆம் ஆண்டுவாக்கில் ஆனந்தவிகடன் ஆசிரியர் தேவன் அவர்கள் தலைவராக இருந்தபோது அழ. வள்ளியப்பா அவர்கள் பொதுச் செயலாளராகப் பணியாற்றினார். பிறகு துணைத் தலைவராகி 1966 ஆம் ஆண்டு தலைவராகவே ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். சங்கம் நடத்திய மாநாடுகளின் வெற்றிக்கும் தம் பங்கைச் சிறப்பாகச் செய்துள்ளார். மதுரையில் நடைபெற்ற 5 ஆம் உலகத் தமிழ் மாநாட்டில் கருத்தரங்கு அமைப்புக்குழு உறுப்பினராக இருந்ததோடு தமிழில் குழந்தை இலக்கியம் என்ற ஆய்வுக்கட்டுரையையும் வழங்கியுள்ளார்.

சென்னையில் ஆறு குழந்தை இலக்கிய மாநாடுகளையும், ஏழாவது மாநாட்டை காரைக் குடியிலும், எட்டாவது மாநாட்டை கோவையிலும் நடத் தியுள்ளார். எல்லா மாநாடுகளிலும் குழந்தைப் புத்தகக் கண்காட்சி, குழந்தைகள் கலைநிகழ்ச்சி, புதிய நூல்கள் வெளியீடு என்று பிரமாதப்படுத்திய பெருமைக்குரியவர் அவர். டில்லியில் சாகித்ய அகாடமி நடத்திய அகில இந்திய புத்தகக் கண்காட்சியில் தமிழ்பகுதி அமைப்பாளராகப் பணியாற்றியிருக்கிறார். இலங்கையிலும், இந்தியாவின் பல பகுதிகளிலும் நடந்த குழந்தைகள் இலக்கியம் தொடர்பான கருத்தரங்குகளிலெல்லாம் பங்கேற்ற பெருமைக்குரியவர். தமிழில் குழந்தை எழுத்தாளர்கள் குறித்த நான்கு தொகுப்பு நூல்களையும் ஆங்கிலத்தில் Who is who of Tamil Writers For Children என்ற தொகுப்பையும் வெளிக்கொணரக் காரணமாக இருந்து உழைத்துள்ளார்.

குழந்தைகளுக்காக ஏறத்தாழ 55க்கும் அதிகமான நூல்களை எழுதிய அழ வள்ளியப்பா அவர்களுக்கு நடுவண் அரசு இரு பரிசுகளையும், தமிழ்நாடு அரசு ஆறு பரிசுகளையும் வழங்கிப் பெருமை சேர்த்துள்ளது. பல்வேறு விழாக்களை நிகழ்த்தி தாமும் பிற எழுத்தாளர்கள் பெருமை பெறக் காரணமாக இருந்துள்ளார். அவருடைய 85 ஆவது ஆண்டுப் பிறந்தநாளின் போது இந்திய அஞ்சல் துறை நினைவுச் சிறப்பு அஞ்சல் தலை வெளியிட்டது. குழந்தைக் கவிஞர் நினைவாக இயங்கும் அழ வள்ளியப்பா இலக்கிய வட்டம் இன்றும் பல நிகழ்ச்சிகளை நடத்துவதும், பரிசுகள், விருதுகள் வழங்கிப் பாராட்டுவதுமாய் அவரது நினைவைப் போற்றுகின்றன.

முன்னரே குழந்தைக் கவிஞருடன் எனக்கு அறிமுகமும் நட்பும் இருந்தாலும் 1982ஆம் ஆண்டுவாக்கில் அது மிகவும் நெருக்கமானது. பாரத ஸ்டேட் பாங்கின் ஆட்சி மொழிகள் துறையின் அதிகாரியாகப் பணியாற்றிய போது ஏறத்தாழ 15000 வங்கிக் கலைச்சொற்கள் அடங்கிய

அகராதியொன்றை தயாரிக்கும் பணியில் தான் ஈடுபட்டிருந்தேன். அப்போது தலைமைப் பொது மேலாளராக இருந்த திரு.கபில்தேவ் நய்யார் அவர்களிடம் அச்சொற்களின் சீர்மையை தமிழறிஞர்கள், ஓய்வு பெற்ற அரசு, வங்கி அதிகாரிகள் இணைந்த ஒரு குழுவுடன் கலந்து உறுதி செய்து கொள்ளலாம் என்று ஒரு யோசனை தெரிவித்திருந்தேன். அப்போது நான் திரு. நய்யாருக்கு தமிழ் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தேன். ஒரு நல்ல நாளில் அரசு விழாவில், தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த அகராதியை வெளியிட்டதும், திரு. நய்யார் அவர்கள் தமிழில் உரையாற்றி அசத்தியதையும், இன்றும் தமிழறிஞர்களும், வங்கியாளர்களும் அறிவர். திரு. நமச்சிவாயம், திரு. முத்தையா உடையப்பன், திரு.சௌந்திரராஜன் போன்ற எங்கள் அதிகாரிகளும் பாராட்டிற்குரியோர்.

இதில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநராக இருந்த டாக்டர் சிலம்பொலி செல்லப்பன், துறைச் செயலாளராக இருந்த உரைவேந்தர் அவ்வை நடராசன், தமிழ்த் தொண்டர் திரு. முத்துப்பிள்ளை, டாக்டர் க.ப.அறவாணன், டாக்டர் பொற்கோ போன்றோருடன் குழுவில் அமர்ந்த பெருமை மட்டுமல்ல, எங்களுக்குப் பேருதவியாக இருந்ததில் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களும் நன்றிக்குரியவர். அவரது தமிழும் வங்கி அனுபவமும் எங்களுக்கு மிகவும் உதவியாக இருந்தன. அந்நாள்களில் சென்னை, அண்ணாநகரில் அவருடைய இல்லத்திற்குச் செல்லும் போதெல்லாம் அன்பொழுக வரவேற்பார். அவரது இயல்பான, எளிமையான பேச்சு, நகைச்சுவை யாவும் எவரையும் ஈர்க்கும்.

வங்கியிலிருந்து ஓய்வு பெற்ற அவர் நலமாகத்தான் நடமாடிக் கொண்டிருந்தார். அவரது முடிவு திடுமென்று நிகழ்ந்துவிட்டது. மதுரை, காமராசர் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக இருந்த அழ.வள்ளியப்பா 1989 மார்ச் 10 அன்று காலை மதுரைக்குச் சென்றார். மாலையில் அவர் பேசத் தொடங்கினார். குழந்தைகள் இலக்கியம் கூடப் பல்கலைக் கழகம் பாடத் திட்டத்தில் இடம் பெறவேண்டும் என்றெல்லாம் பேசியவர் பேச்சை முடிப்பதற்குள் மயங்கி விழுந்துவிட்டார். முதலுதவிக்குப்பின் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஒரு வாரம் சிகிச்சை பெற்றும் நலம் பெறாமல் மார்ச் 16 அன்று இயற்கை எய்திவிட்டார். அவரது புகழுடல் இராயவரம் கொண்டு செல்லப்பட்டு வானுலகத்திற்கு வழியனுப்பி வைக்கப்பட்டார்.

அழ வள்ளியப்பா அவர்களின் மறைவு குழந்தைகளுக்கும், குழந்தை இலக்கிய உலகுக்கும், தமிழுக்கும் பேரிழப்பு. வள்ளியப்பா மீது பேரன்பு கொண்ட என் இனிய நண்பர் மற்றும் மோர் குழந்தை எழுத்தாளர் ‘டிங்டாங்’ இதழாசிரியர் திரு.பி. வெங்கட்ராமன் (வடமலையான்) முயற்சியால் அழ.வள்ளியப்பா படித்த காந்தி உயர்நிலைப் பள்ளியில் மார்பளவு சிலை வைக்கப்பட்டுள்ளது.

அழ. வள்ளியப்பா அவர்களின் பெருமைக்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் பல்வேறு விருதுகள் அவரைச் சிறப்பித்துள்ளன. தமிழ்ப் பேரவைச் செம்மல் என்ற விருதை காமராசர் பல்கலைக் கழகம் வழங்கியுள்ளது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் கவிஞருக்குத் தமிழன்னை விருதளித்துச் சிறப்பித்துள்ளது. பிள்ளைக் கவியரசு, மழலைக் கவிச்செம்மல், தமிழ்ப் பேரவைச் செம்மல் என்றெல்லாம் அவருக்குப் பல பட்டங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் பெயரோடு ஒட்டிக்கொண்ட பிரம்மாண்டமான பட்டம் ‘குழந்தைக் கவிஞர்’ என்பது மட்டுமே. குழந்தைக் கவிஞர் பெற்ற விருதுகளைப் போலவே, அவருடைய பெயரில் வழங்கப்படும் விருதுகளும் குறிப்பிடத்தக்கவை. சிறப்பாக எஸ்.ஆர்.எம். தமிழ்ப் பேராயம் வழங்கும் விருது, புதுவை பாரதி பல்கலைப் பேரவை வழங்கும் விருது, கவிதை உறவு சார்பாக கவிஞர் கார்முகிலோன் வழங்கும் பரிசுகள் என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

குழந்தைக் கவிஞரின் குழந்தைகளான திரு. அழகப்பன் மற்றும் அன்பு மகள்கள் தந்தையின் சிறப்புக்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில் திகழ்வதும், திருவிழா போல அவரது பிறந்த பெருநாள்களை, குறிப்பாக நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதும் பெருமைக்குரியது. குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் இன்று வாழும் தலை முறைக்கு மட்டுமல்ல, நாளைவரும் சந்ததிக்கும் நேற்றே எழுதியவர். அவர் புகழ் அன்று போல இன்றும், இன்று போல நாளையும் நிலைத்திருக்கும். அவரது நினைவுகளைப் போற்றுவது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும். அரசும் அவரது ஊரில் மணி மண்டபம் கட்டலாம், அவர் பெயரால் விருதுகள் வழங்கலாம். நிகழப்போகும் நாளுக்காக இன்று வேண்டுவோம். அழ வள்ளியப்பாவின் குழந்தை இலக்கியக் கனவுகளை நிகழச் செய்வோம். ●